எஸ்.டி.சி எண். 107/2022 தேதி:30.01.2025

ம.சா.1 ஆன திரு. ஜெர்பி பிராணான்டஸ் என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் வட்டி தொழில் எதுவும் செய்யவில்லை. நான் இப்போது பணி எதுவும் செய்யவில்லை. 2019 ஆம் ஆண்டு நான் Prince Builder என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வந்தேன். 2019 ஆம் ஆண்டில் எனது மாத வருமானம் என்னவென்றால் நிலையான வருமானம் கூற முடியாது . எடுக்கப்படும் ஒப்பந்தத்தை பொறுத்து தான் வருமானம் கிடைக்கும். 2019 ஆம் ஆண்டில் நான் வருமான வரி தாக்கல் செய்தேன் ஆனால் வரி செலுத்துவதற்குரிய வருமானம் இல்லை. நான் யாரிடமும் கடன் எதுவும் வாங்கவில்லை. எதிரியை அவருடைய தந்தை மூலமாக எனக்குத் தெரியும். எதிரி யின் தந்தை என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை. எதிரியின் உறவினர் ஒருவருக்கு நான் கடன் கொடுத்துள்ளேன். அவர் கொடுக்க வேண்டிய தொகை 1,20,000/- நிலுவையில் உள்ளது. எதிரியின் தந்தை முன்நின்று மேற்குறிப்பிட்ட எதிரியின் உறவினருக்கு என்னிடம் இருந்து கடன் வாங்கி கொடுத்தார். அது தவிர்த்து எதிரியின் தந்தை முன்நின்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் வேறு ஒரு நபருக்கும் (காயத்ரி) நான் கடன் கொடுத்துள்ளேன். காயத்ரி என்பவருக்கு நான் 1,40,000/- கடன் கொடுத்துள்ளேன். நான் வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை. 2019 ஆம் ஆண்டிற்கு முன்னர் எதிரி என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை. எனது புகாரில் கண்டவாறு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தான் எதிரி என்னை அணுகி பணம் கேட்டாரா என்றால் சரிதான். 19.09.2019 அன்று 2 லட்சமும், 26.11.2019 அன்று 1 லட்சமும், 14.01.2020 அன்று 1 லட்சமும் நான் எதிரிக்கு கொடுத்துள்ளேன்.

எதிரியுடன் எதிரியின் தந்தை மற்றும் எதிரியின் மனைவி ஆகியோர் வந்து தான் என்னிடம் பணம் வாங்கி சென்றனர். எதிரியின் தந்தையின் முன்னிலையில் நான் எதிரியின் வசம் தான் பணம் கொடுத்தேன். நான் பணத்தை வட்டிக்குக் கொடுக்கவில்லை. எதிரி Painting Contract தொழில் பெரிய அளவில் செய்து வருகிறார். எதிரி நிறைய வருமானம் ஈட்டி வருகிறார் என்றால் சரிதான். எதிரி வசதியாக தான் இருக்கிறார். எதிரி எனக்கு எவ்வளவு தொகை திரும்ப செலுத்தியுள்ளார் என்றால் எதிரி பணம் வாங்கியதோடு சரி திரும்ப எதுவும் செலுத்தவில்லை. எதிரியின் குடும்பம் எனக்கு நன்கு தெரியும். எதிரியின் சகோதரியை எனக்குத் தெரியும். எதிரியின் சகோதரி எங்கு வசிக்கிறார் என்று தெரியாது.

(எதிரி தரப்பு வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

// True Copy //
(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.